செ.வெ.எண்.75 நாள்.21.07.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில், சேரன்மகாதேவி மற்றும் திருநெல்வேலி ஆகிய கல்வி மாவட்டங்களில் உள்ள அரசு/அரசு உதவிப் பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகளின் தலைமையாசிரியர்களுடனான ஆலோசனைக் கூட்டம்–
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சேரன்மகாதேவி மற்றும் திருநெல்வேலி ஆகிய கல்வி மாவட்டங்களில் உள்ள அரசு/அரசு உதவிப் பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகளின் தலைமையாசிரியர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.07.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களும் தங்களது பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு சுகாதாரம் மற்றும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்திட வேண்டும். தங்களது பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் வருகைப் பதிவேட்டினை தினந்தோறும் ஆராய்ந்து திடீர் என காய்ச்சல் என்று விடுமுறை எடுத்தால், அதனை ஆராய்ந்து உடனடியாக உரிய அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். மேலும், பள்ளிகளில் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுகளை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கற்பிக்க வேண்டும். பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து எடுப்பதற்காக விழிப்புணர்வுகளை ஏற்படுத்திட வேண்டும். மேலும், குப்பைத் தொட்டிகளில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து போடுவதற்கான வழக்கத்தினை ஏற்படுத்திட வேண்டும். திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகளையும் அதனால் ஏற்பாடும் தொற்று நோய்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தினை திறந்தவெளி கழிப்பிடம் இல்லா மாவட்டமாக மாற்றிட மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளது. இதனை பள்ளி தலைமை ஆசிரியர்கள் கருத்தில் கொண்டு தங்களது பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் தங்கள் வசிக்கும் இடங்களில் அனைவருக்கும் தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்திட வேண்டும். பள்ளி வளாகத்தில் போதிய இடம் இருப்பின் காய்கறி மற்றும் பழத்தோட்டங்களை பயிர் செய்வது தொடர்பான பயிற்சிகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கி, அதனை ஊக்குவிக்கும் வகையில் போட்டிகளை நடத்திட வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.தனமணி, மாவட்ட கல்வி அலுவலர்கள் (திருநெல்வேலி) திரு.ஜெயபாண்டி, (சேரன்மகாதேவி) திரு.ஜெயராஜ், முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.நாராயணன், பசுமைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.கஜேந்திரபாபு உள்பட திருநெல்வேலி மற்றும் சேரன்மகாதேவி மாவட்ட கல்வி பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.